# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 245/மா/2022**
**நாள் : 01.08.2023**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் 19.11.2022 நாளிட்ட மனு 21.11.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 245/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 19.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"சென்னை-600 001, மண்டலம்-05, வார்டு-56, மண்ணடி, கோரல் மெர்ச்சன்ட் சாலை, கதவு எண்.9/5, (SBI-ATM அருகில்) என்ற இடத்தில் சென்னை மாநகராட்சியிடம் எந்தவிதமான கட்டிட அனுமதியில்லாமல் இரண்டு மாடி கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-05ல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரியவருகிறது. சென்னை பெருநகர மாநகராட்சியின் கடந்த 2022-23 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி ரூ.788.58 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் ஆக

போடப்பட்டது. மேலும் பல நல்ல திட்டங்கள் நிதி இல்லாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அனுமதியற்ற விதிமீறல் கட்டிடங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய தொகையை வசூலித்தால் சென்னை பெருநகர மாநகராட்சியின் நிதிநிலைமை சீராகும். இந்த புகார் தொடர்பாக நான் ஏற்கனவே பலமுறை மேற்கண்ட அலுவலருக்கு புகார் அனுப்பியும் அவர் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது மனு மற்றும் ஆவணங்களின் தகவல்கள் இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போதுவரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 25.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு 56, மண்ணடி, கோரல் மெர்ச்சண்ட் சாலை, கதவு எண். 9/5ல் (SBI-ATM அருகில்) பெருநகர சென்னை மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் இரண்டு மாடி வணிக கட்டடம் கட்டியது குறித்து சென்னை மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியும்,சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட எனது மனுவின் மீது மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்".

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5-ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 25.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, கோரல் மெர்ச்சன்ட் சாலை கதவு எண் 9/5ல் உள்ள கட்டடம் எங்களால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டடத்திற்கு 6/12/2018ல் Stop work notice வழங்கப்பட்ட நிலையில், அடுத்தகட்டமாக De-occupation தாக்கீது 30.11.2021 அன்று வழங்கப்பட்டது. அதன் பின்னர் அதன் தொடர் நடவடிக்கை மண்டல அலுவலர்களால் எடுக்கப்படவில்லை எனவும், மேற்கண்ட கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கை 1 மாத காலத்தில் எடுக்கப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களது வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் திரு. B. விஜயகுமார் சென்னை, மண்டலம் -5, வார்டு 56, மண்ணடி, கோரல் மெர்ச்சன்ட் சாலை கதவு எண்.9/5 என்ற இடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் இரண்டு மாடி கட்டடம் கட்டுவது தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ல் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே தனது மனுவின் மீது பெருநகர சென்னை மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

சென்னை மண்டலம் -5, வார்டு 56, மண்ணடி கோரல் மெர்ச்சன்ட் சாலை கதவு எண்.9/5ல் கட்டப்பட்ட இரண்டு மாடி கட்டடத்தை ஆய்வு செய்ததில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதிக்கு மாறாக "Set Back"ல் விதிமீறல் உள்ளது என கண்டறியப்பட்டதால் 6.12.2018ல் Stop Work Notice / Notice Calling for approved plan தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளதையும் 30.11.2021 அன்று "De-Occupation" தாக்கீது வழங்கப்பட்டுள்ளதையும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5ன் செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. மேலும், மேற்கண்ட இக்கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கை ஒரு மாத காலத்திற்கு எடுக்கப்படும் என மாநகராட்சிப் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட முகவரியில் இரண்டு மாடி கட்டடம் அனுமதியில்லாமல் கட்டப்படுவது குறித்து மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 29.9.2022 நாளிட்ட புகார் மனு அனுப்பும் முன்னரும், 19.11.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் முன்னரும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 5ன் அலுவலர்கள் 6.12.2018 அன்றே தாக்கீது வழங்கும் நடவடிக்கை எடுத்த நிலையில் 6.12.2018 பின்னர், அதாவது சுமார் 3 வருடங்களுக்கு பின்னர் 30.11.2021 அன்று தொடர் நடவடிக்கையாக De-Occupation தாக்கீது வழங்கப்பட்ட நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் அலுவலர்கள் Town and Counry Planning Act, 1971ல் குறிப்பிட்ட கால அளவுகளை கடைபிடிக்கவில்லை என்பது தெரிகிறது. மேற்கண்ட கால தாமதம் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின்மீது ஒரு மாத காலத்திற்குள் உரிய தொடர் நடவடிக்கை எடுக்கவும், மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் மண்டல அலுவலருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The lethargy and prolonged delay after issue of statutory notices at intervals of years by the Zonal Officers expose their indifference, negligence, complicity and collusion besides throwing their duties to winds in an audacious manner. This kind of conduct on the part of the Corporation field delinquent officials abets and encourages building rules violators on the part of the builders without any fear betraying a sad failure of Zonal leadership in reviewing the work of the subordinates on a regular basis. The Greater Chennai Corporation Commissioner

is directed to initiate necessary disciplinary action against all the officials concerned right from the Assistant Commissioner who has thoroughly defaulted in his review responsibilities.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
   62, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
3/8/23